මැතිවරණ කොමිෂන් සභාව
தேர்தல் ஆணைக்குழு
Election Commission
මැතිවරණ මහලේකම් කාර්යාලය, අංක.02 සරණ මාවත, රාජගිරිය, ශ්‍රී ලංකාව
தேர்தல்கள் செயலகம், இல 02 சரண மாவத்தை, இராஜகிரிய, இலங்கை
Elections Secretariat, No.02 Sarana Mawatha, Rajagiriya, Sri Lanka

මාධ්‍ය නිවේදනය
ஊடக அறிவித்தல்
MEDIA RELEASE

**ஊடக அறிவித்தல் இல: LAE/2023/59** **2025.02.19**

**உள்ளூரதிகார சபைகள் தேர்தல் - 2023**
**வைப்புப் பணம் மீளளித்தல்**

2023 ஆம் ஆண்டில் நடாத்தப்படவிருந்த, ஒத்தி வைக்கப்பட்ட (262 ஆம் அத்தியாயமான) உள்ளூரதிகார சபைகள் தேர்தலில், குறித்த கட்டளைச் சட்டத்தின் 29 ஆம் பிரிவின் பிரகாரம், அங்கீகரிக்கப்பட்ட அரசியற் கட்சிகள் மற்றும் சுயேச்சைக் குழுக்களால் வைப்புச் செய்யப்பட்ட வைப்புப் பணம் 2025.02.17 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க உள்ளூரதிகார சபைகள் தேர்தல்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 2(3) ஆம் பிரிவின் பிரகாரம், குறித்த நபர்களுக்கு வைப்புச் செய்தமைக்காக வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை அந்நபர்கள் சமர்ப்பித்தால், அவர்களுக்கு அப்பணம் மீளளிக்கப்பட வேண்டுமென குறித்துரைக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், வைப்புச் செய்த வைப்புப் பணம் மீளளிக்கப்படுவதற்காக,

- குறித்த கட்டளைச் சட்டத்தின் 29(3) ஆம் பிரிவின் பிரகாரம், வைப்புப் பணம் கையேற்கப்பட்ட சந்தர்ப்பத்தில், வைப்புப் பணத்தை வைப்புச் செய்த நபர்களுக்கு வழங்கப்பட்ட பற்றுச் சீட்டின் மூலப்பிரதி : மற்றும்
- வைப்புப் பணம் மீளளிப்புச் செய்வதற்கான விண்ணப்பக் கடிதமொன்று : அத்துடன்

வைப்புப் பணம் வைப்புச் செய்துள்ள குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தில் 2025.02.28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு இத்தால் அறியத் தருகின்றேன்.

2025.02.28 ஆந் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்படுகின்ற விண்ணப்பங்கள் தொடர்பாக, குறித்த மாவட்டத் தேர்தல் அலுவலகத்தினால் குறித்த நபர்களுக்கு வைப்புப் பணத்தை மீளளப்புச் செய்வதற்காக, தாமதமின்றி அதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென மேலும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

தேர்தல் ஆணைக்குழுவின் ஆணைப்படி,

சமன் ஸ்ரீ ரத்நாயக்க
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்

(+94)112868441-42-43 (+94)112868426 info@elections.gov.lk www.elections.gov.lk Election Commission of Sri Lanka SriLankaElectionCommission elecomsl